## ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்ட

# முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் கடும் நிபந்தனையுடன் அனுப்பப்பட்டனர்

### - யாழில் தமிழக சட்டத்தரணி புகழேந்தி தெரிவிப்பு




இந்தியாவின் முன்னாள் பிரதமர் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 33 வருடங்களுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்ட முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் இலங்கைக்குக் கடுமையான நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாட்டுடனேயே அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று தமிழக சட்டத்தரணி புகழேந்தி பாண்டியன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

"கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 33 வருடங்களின் பின்னர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் நால்வரும் திருச்சி சிறப்பு முகாமில் சுமார் ஒன்றரை வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் சாந்தன் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்து இருந்தார். ஏனைய நால்வரும் ☞2

# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 23 வெள்ளிக்கிழமை 05.04.2024 கதிர் 220






## காணி அளவீடு மக்களின் எதிர்ப்பால் இடைநிறுத்தம்



யாழ்ப்பாணம், கீரிமலை ஜனாதிபதி மாளிகையை அண்டிய பகுதிகளில் உள்ள பொதுமக்களின் ☞2

## அரசாங்கம் 'வற்' வரியை 12 சதவீதமாக குறைத்திருக்க முடியும் அவ்வாறு செய்திருந்தால் விலை குறைப்பை செய்திருக்கலாம்

### மக்கள் ஒடுக்கப்பட்டுள்ளனர் என்கிறார் எஸ்.எம். மரிக்கார் எம்.பி.



இந்த அரசாங்கத்திற்கு 'வெற்' வரியை 12 சதவீதமாக குறைத்திருக்க முடியும். அப்படி செய்திருந்தால் பெட்றோல், டீசல், எரிவாயு, போக்குவரத்து கட்டணம், பொருட்களின் விலை ஆகியன கணிசமான அளவில் குறைந்திருக்கும். ஆனால் அரசாங்கம் அதனை செய்யவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் ☞2

## கூட்டுறவு வங்கிகளில் பணம் வைப்பு செய்தவர்களை பாதுகாக்கும் கடமையில் மத்திய வங்கி தவறியுள்ளது

### ஆளுநர் மற்றும் உயர் அதிகாரிகள் மீது பிரதமர் குற்றச்சாட்டு



கூட்டுறவு வங்கிகளில் பணத்தை வைப்பிலிட்டவர்களின் வைப்புகளை இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வையிடக் கூடியதாக இருந்தும் வைப்பாளர்களை பாதுகாக்கும் வகையில் செயற்படவில்லை என மத்திய வங்கி ஆளுநர் மற்றும் உயர் அதிகாரிகள் மீது அவர்கள் முன்னிலையிலேயே பிரதமர் தினேஷ் குணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறு ஓய்வூதியம் பெறுவோர் பலர் தங்களது ஓய்வூதிய நிதியை கூட்டுறவு வங்கிகளில் வைப்பு செய்துள்ளதாகவும், ஆனால் கூட்டுறவு வங்கிகள் சரிவு நிலையை அடைந்துள்ளமையினால், வைப்பாளர்கள் உரிய பணத்தை பெற முடியாமல் பல ஆண்டுகளாக தவித்து ☞2

## மேல் மாகாணத்திலுள்ள அனைத்து முச்சக்கர வண்டிகளும் போக்குவரத்து அதிகாரசபையில் பதிவு செய்தல் கட்டாயமாகும

### ஜூலை முதலாம் திகதி முதல் வீதி கண்காணிப்பு நடைபெறும்

மேல் மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்து முச்சக்கர வண்டிகளும் மேல்மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் பதிவு செய்து அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என மேல்மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் எச். பிரசன்ன சஞ்சீவ தெரிவித்தார்.

பத்தரமுல்லை ரன்மக வீதியில் அமைந்துள்ள மேல் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் நேற்று (04) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், இவ்வாறு முச்சக்கர வண்டிகளை பதிவு செய்வதற்கு 3000 ரூபா கட்டணம் அறவிடப்படும் எனவும், மேலதிக விபரங்களை 0112864542 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாக அறியமுடியும் எனவும் குறிப்பிட்டார்.

முச்சக்கரவண்டி பதிவு செய்தலுக்கு ரூ.500, வருடாந்த பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிக்கு ரூ.1000, சாரதி பதிவிற்கென ரூ.1500 என அனைத்திற்குமான ஒட்டுமொத்த தொகையாகவே 3000 கட்டணம் வசூலிக்கபடுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். மேல் மாகாணத்தில் உள்ள 8 பிராந்திய பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அலுவலகங்களிலும் முச்சக்கரவண்டி பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், இதுபற்றிய கூடுதல் தகவல்களை றறற.றிவயஒெ. டம எனும் இணையதளத்தில் காணலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

## நுகர்வோருக்காக சம்பிக்க எம்.பி. குரல் கொடுக்க முன்வந்துள்ளமை மகிழ்ச்சி தருவதாக உள்ளது!

### நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத்

அரசியல்வாதியாக நுகர்வோருக்கு ஆதரவாக குரல் கொடுக்க முன்வந்துள்ள சம்பிக்க ரணவக்க எம்.பி. குறித்து தான் மகிழ்ச்சி அடைவதாக மக்கள் நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இன்று கோழி இறைச்சியின் விலை அதிவேகமாக அதிகரித்துள்ளதாக தெரிவித்த அசேல சம்பத், உப்புக் கல் தொடக்கம் முதல் அனைத்து உணவுப் பொருட்களையும் வர்த்தக மாஃபியா கையப்படுத்தியுள்ளதாகவும், சிங்கள - தமிழ் புத்தாண்டுக்கு கோழி இறைச்சிக்கு தட்டுப்பாடு இருக்காது என கூறிக்கொண்டே கோழி இறைச்சியின் விலையை அதிகரித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான வர்த்தக மாஃ ☞2

## மாணவன் மீது ஆசிரியை தாக்கியமை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் விசாரணை



வவுனியா, சுந்தரபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 2 இல் கல்வி பயிலும் மாணவன் மீது ஆசிரியர் கண்மூடித்தனமாகத் தாக்கியதில் மாணவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில், இவ்விடயம் தொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய காரியாலயத்தினர் முன்னெடுத்து வருகின்றனர். ☞2

## அரசாங்கம் ‘வற்’ வரியை.....

போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும்தெரிவிக்கையில் “அரசாங்கம் ‘வெற்’ வரியை 18 சதவீதமாக உயர்த்தியது. 600 பில்லியன் ரூபாவை எதிர்பார்த்து அரசாங்கம் இவ்வாறு வரி வீதத்தை அதிகரித்தது. ஆனால், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் கலால் திணைக்களம் ஆகியன 1066 பில்லியன் தொகையை ஈட்டத் தவறின.

1066 பில்லியன் தொகை ஈட்டப்பட்டிருந்தால் ‘வெற்’ அதிகரிப்பின் மூலம் கிடைக்கப்பெறும் ரூ.600 பில்லியனுக்கு மேலதிகமாக 466 பில்லியன் பெறப்பட்டிருக்கும். அப்படி நடந்திருந்தால் ‘வெற்’ வரியை 12 சதவீதமாக குறைத்திருக்கலாம். அவ்வாறு நடந்திருந்தால் பெட்றோல், டீசல், எரிவாயு, போக்குவரத்து கட்டணம், பொருட்களின் விலை ஆகியவற்றை கணிசமான அளவில் குறைத்திருக்கலாம், ஆனால் அரசாங்கம் அதை செய்ய தவறிவிட்டது.

வெங்காயம், உருளைக்கிழங்கு, பால் மா ஆகியவற்றிற்கு வரி விதிக்கப்பட்டு நாட்டு மக்கள் ஒடுக்கப்பட்டுள்ளனர். ஆனால், பெரிய வெங்காயம் ஒரு கிலோ 92 ரூபாய்க்கு துறைமுகத்துக்கு வருகிறது. சுங்கத்திலிருந்து அந்த பெரிய வெங்காயம் வெளியே வரும்போது அதன் விலை கிலோவுக்கு 365 ஆக மாறிவிடுகின்றது. பின்னர் இது சந்தையில் 700 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

இதேபோல்தான், உருளைக்கிழங்கு ஒரு கிலோ 110 ரூபாய்க்கு துறைமுகத்துக்கு வருகிறது. அந்த உருளைக்கிழங்கு சுங்கத்திலிருந்து வெளிவந்து சந்தைக்கு செல்லும் போது ஒரு கிலோ உருளைக்கிழங்கு 840 ரூபாவாக மாறிவிடுகின்றது. இதிலிருந்து அரசாங்கம் எவ்வளவு வரி அறவிடுகின்றது என்பதை தெரிந்து கொள்ளலாம். இதனை சாட்டாகக் கொண்ட நாட்டிலுள்ள வஞ்சக வியாபாரிகள் ஈட்டுகின்ற லாபத்தையும் இதன்மூலம் தெளிவாக காண முடிகின்றது”என்றார். (ரெசி-20)

## கூட்டுறவு வங்கிகளில் பணம்.....

வருவதாகவும் பிரதமர் இங்கு தெரிவித்துள்ளார். ஆனால், இதனை மத்திய வங்கி அதிகாரிகள் அலட்சியப்படுத்துவது பாரிய தவறு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆளும் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கடந்த முதலாம் திகதி நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில்நடைபெற்ற போது ஆளும் கட்சியின் அமைச்சர்கள் முன்னிலையிலேயே பிரதமர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அமைச்சர் பந்துல குணவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த வீரசிங்க, மதுர விதானகே மற்றும் ஜகத் குமார ஆகியோரும் பிரதமர் எழுப்பிய கேள்விக்கு ஆதரவாக தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இதன்போது, மத்திய வங்கியினரையும்கூட்டுறவு பிரிவினரையும் அழைத்து கலந்துரையாடலொன்றை நடத்தினால் நல்லது என அமைச்சர் பந்துல குணவர்தன அழைப்பு விடுத்த போதிலும் மத்திய வங்கி அதிகாரிகள் மௌனம் காத்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய வங்கிக்கு வரம்பற்ற அதிகாரத்தை வழங்குவதன் மூலம் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு அதிகாரியும் கேட்கும் அனைத்தையும் வழங்க முடியாது எனவும், இதற்கு நாடாளுமன்றமே பொறுப்பேற்க வேண்டும் எனவும் பிரதமர் தினேஷ் இங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ரெசி-18)

## முருகன், ரொபேர்ட் பயஸ்,.....

இலங்கைக்குச் செல்வது தமக்குப் பாதுகாப்பு இல்லை எனக் கூறி தாம் வெளிநாடு செல்வதற்கு அனுமதிக்க வேண்டும் எனக் கோரி வந்திருந்தனர். அதற்கு இந்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இலங்கைத் துணைத் தூதரகமும் அனைத்து நாடுகளுக்குமான கடவுச்சீட்டை வழங்க மறுத்தது.

இந்நிலையில், கடந்த மாதம் சாந்தன் உயிரிழந்தமையால் சிறப்பு முகாமில் இருந்த ஏனைய மூவரின் மனநிலை பாதிக்கப்பட்டது. அதனால் அவர்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டது. சிறப்பு முகாமில் தொடர்ந்து இருந்தால் தாமும் உயிரிழந்து விடுவோம் என்ற பயம் அவர்களிடம் ஏற்பட்டமையால் இலங்கை திரும்ப சம்மதித்தனர்.

இலங்கை திரும்ப யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்குச் செல்வதற்கு விமானச் சீட்டு எடுக்க முயன்ற வேளை “ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்” விமானம் மூலமே பயணிக்க முடியும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. குறித்த விமானம் சென்னையில் இருந்து கொழும்புக்கே இருந்தமையால் அதில் பயணிக்க வேண்டி ஏற்பட்டது.

அதேபோன்று சென்னை விமான நிலையில் வரையில் மூவருக்கும் பாதுகாப்பு வழங்கும் முகமாக அதிகாரிகள் செயற்பட்டனர். அனைத்துப் பயணிகளும் விமானத்தில் இருந்து இறங்கிய பின்னரே இறங்க வேண்டும் போன்ற சில கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன.

ஒருவரை நாடு கடத்தும்போது முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இலங்கை வந்து இறங்கியதும் அதிகாரிகள், இவர்கள் மூவரின் கடவுசீட்டையும் மூவரையும் சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அவர்கள் இரு மணி நேரம் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

எவ்வாறு நாட்டை விட்டு வெளியேறினீர்கள்? எதற்காக நீங்கள் இந்தியா சென்றீர்கள்? நீங்கள் எப்போது சென்றீர்கள்? போன்ற பல்வேறு கேள்விகளைக் கேட்டு அவற்றைப் பதிவு செய்தனர்.

பின்னர் இவர்கள் சட்டவிரோதமான முறையில் நாட்டை விட்டு வெளியேறியமையால் இவர்களுக்கு எதிராக நீர்கொழும்பு நீதிமன்றில் தாம் வழக்குத் தாக்கல் செய்யப் போகின்றோம் என்று தெரிவித்தனர்.

பிறகு உயர் அதிகாரிகளுடன் நாம் கலந்துரையாடி, இவர்களுக்கு எதிராக இலங்கையில் எந்தக் குற்றச்சாட்டும் இல்லை என்பதாலும், 33 வருடங்களுக்கு முன்னர் நாட்டை விட்டு சட்டவிரோதமான முறையில் வெளியேறியமை பற்றி வழக்குத் தொடர்வதில் உள்ள சிக்கல் குறித்தும் எடுத்துரைத்தோம். அதன்பின்னர் வழக்குத் தொடராது மூவரையும் விட்டனர்.

சுங்க அதிகாரிகளின் விசாரணைகளின்போது மூவருடன் நானும் அருகில் இருந்தேன். அவர்களின் விசாரணை முடிவடைந்த பின்னர், புலனாய்வுப் பிரிவினர் அவர்களை பொறுப்பெடுத்து தமது விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன்போது, அவர்கள் மூவரையும் தாம் தனித்தனியாக விசாரணை செய்ய வேண்டும் எனக் கூறி மூவரையும் தனித்தனியே அழைத்துச் சென்று விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் விடுவித்தனர்.” - என்றார். (அ)

## காணி அளவீடு...

காணிகளை நில அளவைத் திணைக்களம் அளவீடு செய்ய முற்பட்டதைத் தொடர்ந்து எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி மாளிகையை சுற்றியுள்ள பொதுமக்களின் காணிகளை அறிவித்தல் இன்றி நில அளவை திணைக்களம் இன்று காலை அளவீடு செய்ய முற்பட்டபோது பொதுமக்களின் எதிர்பைத் தொடர்ந்து அளவீடு கைவிடப்பட்டது.

இதன்போது நில அளவைத்திணைக்களத்தினருக்குக் காணி உரிமையாளர்களால் தமது காணி எனத் தெரிவித்து கடிதம் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதன்போது காணி உரிமையாளர்கள், பொதுமக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி க. சுகாஸ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளியிட்டனர். (அ)

## மாணவன் மீது ஆசிரியை.....

வவுனியா, சுந்தரபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவன் கடந்த புதன்கிழமை பாடசாலை முடிந்து வீட்டுக்குச் சென்ற பின், சிறுவ னின் முகத்திலும் தலையிலும் அடிகாயங்கள் காணப் பட்டதையடுத்து பெற்றோர் சிறுவனிடம் விசாரித்ததில் அவரது ஆசிரியை தாக்கினார் என்று தெரிவித்துள்ளான்.

இதையடுத்து பெற்றோர் சிறுவனை நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா பொது வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அனுமதித்ததுடன், சிறுவன் சிகிச்சை பெற்று வருகின்றார். சிறுவனின் நெற்றியில் காயமும், தலை மற்றும் கண் பாதிப்படைந்துள்ளன எனவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

உங்கள் மகனுக்கு அ, ஆ தெரியவில்லை என்றும், அதனாலேயே தான் அடித்தார் என்றும், அடிக்கும்போது சிறுவன் அங்கும் இங்கும் ஓடியதால் முகத்தில் அடிபட்டுவிட்டது என்றும் மேற்படி ஆசிரியர் பெற்றோருக்கும் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வைத்தியசாலை பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் எவரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகளைப் பதியாத போதிலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய காரியாலயத்தினர், சொந்தப் பிரேரணை மூலம் இந்த விடயத்தைக் கவனத்தில்கொண்டு வந்தமையுடன் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தர் உள்ளிட்ட குழுவினர் வைத்தியசாலைக்கு நேரடிக் கள விஜயம் மேற்கொண்டு பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவனிடம் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டமையுடன் தொடர்ச்சியான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

## நுகர்வோருக்காக சம்பிக்க.....

பியாவுக்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும் அதேவேளை சம்பிக்க ரணவக்க எம்.பி.யும் இதில் இணைந்து கொண்டுள்ளமை மிகவும் முக்கியமானது எனவும் அவர் தெரிவித்தார். வர்த்தக மாஃபியாக்களை ஒடுக்க ஏனைய அரசியல்வாதிகளும் முன்னின்று செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெசி-21)




செய்திகளையும் இன்னும் பல
காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து
நிகழ்வுகள் பற்றிய
விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகள் வழங்கி வைப்பு



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த 25 மாணவர்களுக்கு தனவந்தர்களின் பங்களிப்புடன் பாதணிகள் வழங்கும் நிகழ்வு இன்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல். ஜஃபரின் முயற்சியினால் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, சமுர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ. அன்சார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறையில் பல உணவகங்களுக்கு இறுதி எச்சரிக்கை



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேசத்தில் கடந்த 3 நாட்களாக இடம்பெற்ற விசேட சோதனையில் பல உணவகங்களுக்கு இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பொதுமக்களின் நலன் கருதி புனித ரமழான் மாதத்தினை கருத்திற்கொண்டு சம்மாந்துறை பொது சுகாதார பணிமனையின் பொறுப்பதிகாரி டொக்டர் எஸ்.ஐ.எம். கபீர் தலைமையில் கடந்த முதலாம் திகதியிலிருந்து நேற்றுவரை இடம்பெற்ற சோதனை நடவடிக்கைகளில் சில உணவகங்களுக்கு இறுதி எச்சரிக்கையும், மூன்று உணவகங்களுக்கு எதிராக வழக்கு தாக்கலும் செய்யப்பட்டன.

இச்சோதனை நடவடிக்கையின்போது, சம்மாந்துறை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதி உணவகம் உட்பட சம்மாந்துறை பிரதேசத்தில் காணப்படும் பல உணவகங்கள் இதன்போது திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இது குறித்து டொக்டர் எஸ்.ஐ.எம். கபீர் தெரிவிக்கையில், சுகாதாரமற்ற முறையில் காணப்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இனிவரும் காலங்களில் எமது குழுவினர் மிகத் தீவிரமாக திடீர்ச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுப்பர். பொதுமக்களிடம் சுகாதாரம் மீறப்படும் உணவகங்கள் தொடர்பான முறைப்பாடுகள் இருப்பின் அதனை உடனடியாக எமக்கு அறிவிக்கவேண்டும், என்று குறிப்பிட்டார்.






# 30 வருட அரச சேவையிலிருந்து சமுர்த்தி முகாமையாளர் சலீம் இன்றுடன் ஓய்வு பெறுகிறார்

*(சர்ஜூன் லாபீர்)*

*சம்மாந்துறை பிரதேச செயலக தலைமைபீட சமுர்த்தி முகாமையாளர் யூ.எல்.சலீம் தனது 30 வருட அரச சேவையின் பின்னர் இன்று ஓய்வு பெறுகிறார்.*

*அவர் தனது சேவைக் காலத்தில் நிந்தவூர், காரைதீவு பிரதேச செயலகங்களில் கடமையாற்றியிருப்பதுடன் அட்டாளைச்சேனை, சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் தலைமைபீட சமுர்த்தி முகாமையாளராகவும் , அம்பாறை மாவட்ட சமுர்த்திக் காரியாலயத்தில் 11 வருடங்களுக்கு மேலாக*

*மாவட்ட திட்ட முகாமையாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.*

*சிங்கள மொழிப்புலமை காரணமாக மாவட்ட மட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டக்கள் நடைபெறும் போது பணிப்பாளர்களின் சிங்கள மொழியிலான கருத்தாடல்களை தமிழ் மொழிமாற்றம் செய்வதில் 11 வருடங்காக அவரது வகிபாகம் பாராட்டத்தக்கதாகும்.*

*சமுர்த்தி தலைமைக்காரியாலயத்தில் மாவட்ட கருத்திட்ட முகாமையாளர்களின் தேசிய மட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் அவர் அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதிதுவப்படுத்தி கலந்து கொள்வது இவரது வழமையாகும்.*

*அவ்வாறு கலந்து கொள்ளும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் அம்பாறை மாவட்டத்தின் முன்னேற்ற அறிக்கைகளை மிகச்சரியாக தெளிவாக முன்வைத்து, சமுர்த்தித் திணைக்களப் பணிப்பாளரின் பாராட்டை பல தடவைகள் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

*அம்பாறை மாவட்டத்தின் சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார திட்டங்களுக்கான அதிகளவான நிதியினை தலைமைக் காரியாலதிலிருந்து பெறுவதற்கு அவரது அனுகுமுறை காரணமாக அமைந்தது.*

*தனது ஆரம்ப பட்டதாரி நியமனம் சம்மாந்துறை தொழிநுட்ப கல்லூரியிலே கிடைக்கப் பெற்றிருந்த போதும், சில மாதங்கள் அங்கு கடமையாற்றிய பின்னர் அவரது சுயவிருப்பின் பெயரில் பிரதேச செயலகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். அவரோடு தொழிநுட்ப கல்லூரியில் இணைந்து கொண்ட அவரது சமகால நண்பர் தற்போது தொழில்நுட்பக் கல்லூரியில் அதிபர் சேவையில் உள்ளீர்க்கப்பட்டு பதவிநிலை உத்தியோகத்தராக கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கதாகும்.*

*தலைமைபீட சமுர்த்தி முகாமையாளராக தனது சொந்த ஊரான சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் வறுமைப்பட்ட மக்களின் முன்னேற்றகரமான வாழ்வாதார வேலைத்திட்டங்களை தலைமை தாங்கி செயற்படுத்தும் ஓர் தலைமை உத்தியோகத்தராக கடமையாற்றிய நிலையில், பிரதேச செயலாளர் சக உத்தியோகத்தர்கள், சமுர்த்திப் பயனாளிகள் என எல்லோராலும் “நேர்மைமிக்க சிறந்த அரச சேவையாளர் “ என்ற பாராட்டை பெற்றவராக அவர் ஓய்வு பெறுகின்றார்.*

# அனைவரும் நலமுடன் வாழ்வதற்கு மூன்று “உ”க்களில் கவனம் அவசியம்!




அண்மையில் சிறு ஆய்வாக மருத்துவர்களை தொடர்பு கொண்டு ஆலோசனை கேட்டேன். ஆங்கில மருத்துவர், சித்த மருத்துவர், ஆயுர்வேத மருத்துவர் மற்றும் சித்தர்.

அதன் சிறிய சாரம்சங்களை மட்டும் பகிர்கிறேன்.







வயது 40-50 ஆகியவர்கள் மற்றும் அதற்கு அதிகமானவர்களுக்கும் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நோயின்றி நலமுடன் நீண்டநாள் வாழ விரும்புகின்றவர்களும் இது பொருந்தும்.

# ஆறுமாத காலத்திற்கு ஒருமுறை மருத்துவ சோதனை அவசியம். Full master check நல்லது Atlest டீ கொலஸ்ரோல் Diabetes எடுக்கவேணுமாம். அதிலும் குறிப்பாக இந்த நோய் உள்ளவர்கள் கண்டிப்பாக செய்யவேணுமாம்.

# உ உ உ - Triple உ இல் கவனம் அவசியமாக வேணுமாம்.

அதாவது - உடல் உணவு உள்ளம்.

**உடலுக்கு நல்ல பயிற்சிகள் - யோகா முத்திரை, நீச்சல்**



உணவுகள் - சத்தான உணவுகள். உணவே மருந்து மருந்தே உணவு. நிறையுணவுகள் - புரதம், காபோவைதரேற்று, கொழுப்பு நார், ஒமேகா.

சரியான மற்றும் தேவையானவை மட்டும் எடுக்கவேணுமாம். கூடினா கூடாதாம்! அதிலும் காபோவைதரேற்று கூடினால் கெட்ட கொழுப்பாக மாறி உடலுக்குக் கேடு விளைவிக்குமாம்.

உள்ளத்தை நன்கு வைத்திருக்கவேணும் - தியானம் மற்றும் இசை!

# நோய் வந்துவிட்டால் பிறசர் அல்லது நீரிழிவு அல்லது வேறு - உடனே வைத்தியம் செய்யவேணுமாம்!

சிலர் ஏன் பலர் நோயைப்பற்றி சிந்திக்காது அதன் விளைவுகளைப்பற்றி சிந்திக்காது நோயிற்கு பயன்படுத்தும் மாத்திரைகளின் பக்கவிளைவுகளை சிந்திக்கிறார்களாம். இது முற்றிலும் தவறானதாம்!

இது - நீச்சல் தெரியாத ஒருவன் கடலில் விழுந்து சாகும் தறுவாயில் தனது பேர்ஸ் அல்லது ரவுசர் நனையப்போகுது என சிந்திப்பதற்கு ஒப்பாகுமாம்.

# நீரிழிவு மற்றும் பிறசர் ஆபத்தான வருத்தங்களாம்! இவை அதிகமானால் பல பின்விளைவுகள் ஏற்படுமாம். வருமுன் காப்பதே சிறந்தது வந்தால் மருந்துகள் எடுக்கவேணுமாம்.

# மிக மிக முக்கியம் - உடலில் தேங்கும் கழிவுகளே பெரும்பாலான வியாதிகளுக்கு காரணமாம்! அவற்றை வெளியேற்றவேணுமாம். அந்தக்காலத்தில் பேதி, எண்ணெய்க்குளியல் செய்தார்கள் அல்லவா? அவற்றை செய்வது நன்மை தருமாம்.

# சத்தான உணவுகளை சரியான முறையில் நேர ஒழுங்குடன் எடுக்கவேணுமாம்!

உதாரணமாக காலை கடலை பயறு, மதியம் சோற்றுடன் கறியல்லாது - கறியுடன் சோறு! பின் மாலை 5 மணிக்குள் உணவு உண்டிருந்தால் மிகுந்த நல்ல பலன் கிடைக்குமாம்.

இதனைப் பயன்படுத்தி நீரிழிவால் பாதிக்கப்பட்ட பலர் மருந்து எடுத்து பின் உணவால் கட்டுக்குள் கொண்டுவந்துள்ளார்களாம்.

மூன்று முறை உண்பவன் ரோகி. இருமுறை உண்பவன் போகி. ஒரு முறை உண்பவன் யோகியாம்!

காலை மற்றும் இரவு அல்லது மாலைக்கான இடைவெளி 12 மணித்தியாலங்கள். அல்லது அதிகபட்சம் 14 மணித்தியாலங்கள். உதாரணமாக, காலை 6 மணி முதல் மாலை 6 வரை!

# குறைந்தது 8 கோப்பை தண்ணீர் குடிக்கவேணுமாம்! அவரவர் உடலுக்கு ஏற்ப 3-5 லீற்றர் தண்ணீர் குடிப்பது நல்லதாம்! உணவில் பழங்கள், தானியங்கள், பச்சைக்காய்கறிகள், அளவாக முட்டை, சிறிதளவு மீன் எடுத்தால் நன்றாம்.

# அனைத்தை விட மிக மிக முக்கியம் நடை அல்லது



சைக்கிளோட்டம்!

ஒரு நாளைக்கு 10 கிலோ மீற்றர் நடந்தால் ஆயுள் அதிகரிக்குமாம். நோய் அதிகம் உள்ளவர்கள் நோய் கட்டுக்குள் வந்தபின்னரே நடைப்பயிற்சி வைத்தியரின் ஆலோசனை பெற்று மேற்கொள்வது நன்று

மாத்திரைகளை வைத்தியரின் ஆலோசனை இன்றி அவர் அவர் இஷ்டத்திற்கு கூட்டவோ அல்லது குறைக்கவோ கூடாதாம் .

# இந்த அரிசி மா இடியப்பம் புட்டு தவிர்த்து குரக்கன் மா, கடலை மா, கோதுமை மா, பயறு தோசை, ஒடியல் மா, கனக்க ஏன்? எமது முன்னோர்கள் பயன்படுத்திய - தேங்காய் எண்ணெய் அடங்கலாக - அனைத்தையும் கண்ணை மூடிப் பயன்படுத்தலாமாம்! - பாம் ஒயில் அல்ல. இதுவும் அளவாகத்தான், அதிலும் நோயாளர்கள் (கொலஸ்ரோல், பிறசர் உள்ளோர்) மருத்துவரின் ஆலோசனை பெற்றே பயன்படுத்தவேணுமாம்!

சில நோய்களுக்கு சிலது கண்டிப்பாகக் கூடாது! உதாரணம் - பிறசருக்கு உப்பு ஆகாதாம். வாழைப்பழம் நல்லதாம். உணவுக் கட்டுப்பாடும் தளர்வும் நோய்களுக்கு ஏற்ப மாறுபடுமாம்.

# சூரிய உதயத்திற்கு முன் எழுந்து காலைக்கடன்களை முடித்திருத்தல். பஞ்சபிராணன், பஞ்ச பூதச்சமநிலைப் பயிற்சிகள், சக்கரதியானங்கள் - அவரவர் ஆன்மீக வழிகள் - அவரவர் குருமாரின் ஆலோசனைகள் பெற்று மேற்கொள்ளல் - அவர்கள் ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுதல் சிறப்பானதாம்.

இந்த அருமையான அனைத்துத் தகவல்களையும் தந்த அனைவருக்கும் ஐகுறிப்பாக மருத்துவர் கண்ணன் அவர்களுக்கும் நன்றிகள்.

இது அனைவரது கூற்றின் தொகுப்பே அன்றி அறுதியானதும் உறுதியானதும் முடிவானதும் அல்ல!

இங்குள்ள வேறு மருத்துவர்கள் அல்லது துறைசார் வல்லுநர்களின் கருத்துக்கள், ஆலோசனைகள், திருத்தங்கள் இருப்பின் தயங்காது கூறுங்கள்! அனைவருக்கும் உதவியாக இருக்கும்.

**தொகுப்பு - தியாகராஜா சத்தியேந்திரா**
**தனித்துவமான ஆன்மீகத் தலைவரும்**
**வழிகாட்டியும்**
**ஆஸ்பத்திரி வீதி,**
**சிதம்பர நடராஜர் கோவில் மடம்**
**சங்கானை.**
**தொ.பே.இல : 1094 761425768**

# மன்னார் – முசலி பிரதேச விவசாயிகளுக்கு அதியுயர் விளைச்சல் தரும் மிளகாய் விதைகள்



மன்னார், முசலி பிரதேசத்தின் அகத்திமுறிப்பு அளக்கட்டு, பொற்கேணி அளக்கட்டு, வேப்பங்குளம் அளக்கட்டு, பிச்சைவாணிபங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த, தெரிவுசெய்யப்பட்ட நூற்றுக்கணக்கான விவசாயிகளுக்கு, அதி உயர் விளைச்சல் தரக்கூடிய மிளகாய் விதைகள் வழங்கும் வைபவம், கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) அளக்கட்டு பிரதேசத்தில் இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தலைமையில், முசலி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் எஸ்எம்எம். பைரூஸின் ஏற்பாட்டில், இந்தியாவின் பாலாஜி வென்சர்ஸ் லங்கா நிறுவனத்தின் நிதி அனுசரணையில், மீள்குடியேறியுள்ள முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், மேற்படி உயர்தரத்திலான மிளகாய் விதைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த விவசாய ஆலோசகரான கணேஷ், மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் சகிலா பானு மற்றும் மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் முஜாஹிர் உட்பட பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர்.

# திருக்கோணேச்சர ஆலய 13 ஆம் திருவிழா இன்று



(ஹஸ்பர் ஏ.எச்)

திருக்கோணேச்சர ஆலய மகோற்சவத்தின் 13 ஆம் திருவிழா இன்று கனடா திருகோணமலை நலன்புரிச்சங்கத்தினால் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கனடா திருகோணமலை நலன்புரிச் சங்கக் காப்பாளர் சண்முகம் குகதாசன், அதன் நிர்வாக உறுப்பினர் கனகசுந்தரம் இலங்கேஸ்வரன், திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கப் பொருளாளர் இராசரத்தினம் கோகுலதாசன் உள்ளிட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வினை முன்னிட்டு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் பாடசாலை மாணவர்கள் வெளியூர், வெளிநாட்டு பக்தர்கள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.

# பரிசளிப்பு மற்றும் பாராட்டு வைபமும் இப்தார் நிகழ்வும்



(எம்.ஏ.றமீஸ்)

புனித ரமழான் காலத்தில் மக்களின் ஆன்மீக செயற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கில் அட்டாளைச்சேனை அல்-இபாதா கலாசார மன்றத்தின் மூலம் 13வது வருடமாக நடைபெறும் ஹதீஸ் மஜ்லிஸ் நிகழ்வினைத் தொடர்ந்து ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வும், பரிசளிப்பு மற்றும் பாராட்டு வைபவமும் நேற்று (04) மாலை அட்டாளைச்சேனையில் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் மௌலவி எம்.ஐ.சப்றி தலைமையில் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வையின் வழிப்படுத்தலின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின்போது புனித ரமழான் காலத்தில் கடந்த இருபது தினங்களுக்கு மேலாக தொடரும் விசேட மார்க்க சொற்பொழிவுகளை மையப்படுத்தி இடம்பெற்ற போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், அட்டாளைச்சேனை பிரதேசத்தில் இருந்து அண்மைக்காலத்தில் பொதுப் பரீட்சைகளில் திறமை காட்டியவர்கள் மற்றும் புதிதாக உயர் பதவிகளில் இணைக்கப்பட்டவர்கள் போன்றோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது கிழக்கிலங்கை அரபுக்கலாசாலை முதல்வர் மௌலவி ஏ.எல்.எம். அஷ்ரஃப் ஷர்க்கியினால் விசேட மார்க்க சொற்பொழிவும் துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றன. இதில் உலமாக்கள், அரசியற் பிரமுகர்கள், அரச உயர் அதிகாரிகள், துறைசார் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# பரீட்சை விடை தாள்களை திருத்துவோரின் கொடுப்பனவு அதிகரிப்பை ஆராயக் குழு !



சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சை விடை தாள்களை திருத்துபவர்களினதும், பரீட்சை கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களினதும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு அடுத்த மூன்று வாரங்களுக்குள் குழுவொன்று நியமிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த் தெரிவித்துள்ளார்.

அந்த குழுவின் அறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகளை எவ்வாறு அதிகரிப்பது என்பது தொடர்பில் தீர்மானிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயர்தரப் பரீட்சைக்கு 19,000 விடைத்தாள் திருத்துபவர்களும், சாதாரண தரப் பரீட்சைக்கு 35,000 விடைத்தாள் திருத்துபவர்களும் தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களும் விடைத்தாள் திருத்தும் பணிக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (

ரெசி-16)

## இராஜாங்க அமைச்சர் சிவ.சந்திரகாந்தன் எழுதிய ஈஸ்டர் படுகொலை நூல் திருமலையில் அறிமுகம்

(ஹஸ்பர் ஏ.எச்)

இராஜாங்க அமைச்சர் சிவ.சந்திரகாந்தன் எழுதிய ஈஸ்டர் படுகொலை நூல் அறிமுக விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வு, திருகோணமலை பொது நூலக நூல்நிலைய கேட்போர்கூடத்தில்நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## நோய்களை ஏற்படுத்தக்கூடிய இறால் வகை
## இறக்குமதி செய்யும் நிறுவனம் பற்றி கவனம் செலுத்துமாறு கோரிக்கை!

மீன்களை இறக்குமதி செய்து மீள் ஏற்றுமதி செய்யும் நிறுவனமொன்று நாட்டின் ஒட்டு மொத்த இறால் உற்பத்திக்கும் பாதிப்பாக அமையும் வகையில் நோய்களை ஏற்படுத்தக்கூடிய இறால் வகையினை இறக்குமதி செய்து வருவதாக பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் குறைப்பதற்கான துறைசார் கண்காணிப்புக் குழுவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மீன்பிடித் தொழிலை பாதிக்கும் வகையில் மீன் இறக்குமதிக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் உடனடியாக அழைத்து முடிவெடுக்க வேண்டும் எனவும் துறைசார் கண்காணிப்புக் குழுவின் தலைவர் இந்தக் குழுவில் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் குறைப்பதற்கான துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடிய போதே இத்தகவல் வெளியாகியது. இதன்போது கடற்றொழில் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் அமைச்சின் கீழுள்ள அரச நிறுவனங்களின் தலைவர்கள், வடக்கு - கிழக்கு சமூக பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்திய மீனவர்கள் இழுவை படகுகளை பயன்படுத்துவதால் கடல் வளத்திற்கு ஏற்பட்ட சேதம் குறித்து இதுவரை மதிப்பிடப்படவில்லை எனவும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

வடக்கில் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடித்தல் உள்ளிட்ட சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை தடுப்பதற்கான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கடற்றொழில் அமைச்சுக்கு துறைசார் கண்காணிப்புக் குழு பரிந்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெசி-17)

## குச்சவெளி பிச்சமல் விகாரையில் தொல்பொருள் அருங்காட்சியகம்



(ஹஸ்பர் ஏ.எச்)

குச்சவெளியில் உள்ள பிச்சமல் விகாரைக்கு விஜயம் செய்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், வணக்கத்துக்குரிய பௌத்த மதகுருவிடம் ஆசிர்வாதம் பெற்றதுடன், நடைபெற்று வரும் விகாரை புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்வதற்கு 1.5 மில்லியன் நிதியும், தொல்பொருள் அருங்காட்சியகத்தை ஆரம்பிப்பதற்கு 3.5 மில்லியன் நிதியும் ஒதுக்கீடு செய்தார்.

உள்ளூராட்சி சபைகளால் பராமரிக்கப்படாத விகாரையை சுற்றியுள்ள கடற்கரையை ஆய்வு செய்து, 24 மணி நேரத்திற்குள் கடற்கரையை சுத்தம் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் பணிப்புரை விடுத்தார்.

## திகாமடுல்ல கிரிக்கட் சமர்




(அஸ்ஹர் இப்றாஹிம்)

தமிழ் சிங்கள புதுவருடத்தையொட்டி திகாமடுல்ல வரலாற்றில் முதற் தடவையாக அம்பாறை நகரில் புகழ் பூத்த அம்பாறை காமினி கல்லூரிக்கும், அம்பாறை டீ.எஸ்.சேனநாயக தேசிய கல்லூரிக்குமிடையிலான திகாமடுல்ல கிரிக்கட் சமர் நாளை 6 ஆம் திகதி சனிக்கிழமை அம்பாறை டீ.எஸ்.சேனநாயக கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

அம்பாறை டீ.எஸ்.சேனநாயக கல்லூரி பழைய மாணவர் சங்கம் இக்கிரிக்கட் சமரை ஒழுங்கு செய்துள்ளது.






## சம்மாந்துறை ஊடக மையத்தினர் கப்சோ நிறுவனத்துடன் சந்திப்பு



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட சமூக ஊடக ஆர்வலர்கள் ஒன்றிணைந்த சம்மாந்துறை ஊடக மையத்தின் உறுப்பினர்களுக்கும் கப்சோ நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் எ.ஜே காமில் இம்டாட்டுக்கும் இடையிலான சந்திப்பு சம்மாந்துறையில் உள்ள கப்சோ நிறுவனத்தின் அலுவலகத்தில் அண்மையில் நடை பெற்றது.

இதன்போது கப்சோ நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் எ.ஜே காமில் இம்டாட் தகவல் தெரிவிக்கையில், ஊரின் சில முக்கியமான வரலாறுகள்மறைந்துள்ளன. அவற்றை ஆவனப்படுத்துவதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன். அதுமட்டுமின்றி சம்மாந்துறை ஊடக மையத்தை எதிர்காலத்தில் எப்படி எடுத்துச் செல்லவேண்டும் என்பது பற்றியும் பேசப்பட்டது, என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை ஊடக மையத்தின் தலைவர் ஏ.பி. இம்ரான், செயலாளர் ஏ.எம் ஹறூஸ், உப செயலாளர் ஐ.எல்.எம். நாசிம், அமைப்பாளர் ஷாதிர் ஏ ஜப்பார் மற்றும் ஊடக மையத்தின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## அந்நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான நியமன கடிதங்கள் வழங்கி வைப்பு



(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் வக்பு சபையால் மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான நியமனக்கடிதம் உத்தியோகபூர்வமாக நேற்று (4) காரைதீவு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச செயலகத்திற்கான முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். பர்ஹானின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன், நிர்வாக உத்தியோகத்தர் ரீ. கமலநாதன் ஆகியோர் கலந்து கொண்டு மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்துக்கான நியமன கடிதங்களை ஜும்மா பள்ளிவாசல் தலைவர் ஏ. பௌசர், உப தலைவர் ஏ.எம். ஜாஹீர், உப செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமர், பொருளாளர் எம்.எப்.எம். றிபாஸ், உறுப்பினர் எஸ். பஸ்லூன் ஆகியோரிடம் கையளித்தனர்.

மாளிகைக்காட்டின் மூத்த பள்ளிவாசலான இந்த ஜும்மா பெரிய பள்ளிவாசல் தமிழ் – முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் காரைதீவு பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழுள்ள பள்ளிவாசலாகும்.

# JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

# ஜேரைட்
# JRIDE
## TAXI APP FROM JAFFNA
**இலங்கை முழுவதும் | Islandwide**



DOWNLOAD PASSENGER APP:

**ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.**

## நாங்கள் தயாராகிவிட்டோம்!

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**



jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



**வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!**
**உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!**

**இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!**

DOWNLOAD DRIVER APP:

jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

GET IT ON Google Play
Download on the App Store





## SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி

**நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?**

**விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?**

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

**HOTLINE : 706563213 / 703563213**



## JRIDE TAXI APP
## SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

**மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!**